## November 17, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தேசிய பத்திரிகை தினம்- நவம்பர் 16, 2025.
2. வட அமெரிக்க நாடான மெக்ஸிகோவின் தலைநகர் மெக்ஸிகோ சிட்டியில் குற்றச் சம்பவங்கள் மற்றும் ஊழலுக்கு எதிராக 'ஜென் இசட்' அமைப்புகள் சார்பாக போராட்டம் நடத்தப்பட்டது.
    i. மிச்சோகன் மாகாணத்தின் உருபான் நகர மேயராக இருந்த கர்லோஸ் மன்ஸோ அண்மையில் கொல்லப்பட்டார். அதன்பிறகு, அந்த மாகாணத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னதாகப் பெரும் போராட்டம் நடைபெற்றது.
    ii. இதன் தொடர்ச்சியாக தற்போது அதிபர் கிளாடியா ஷீன்பாம் அரசுக்கு எதிராக ஜென் இசட் அமைப்பினர் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். ஊழல் மற்றும் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் குற்றஞ்சாட்டி அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.
    iii. இந்தப் போராட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என அந்த நாட்டின் மிகப் பிரபலமான ஜென் இசட் யூடியூபர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளனர். ஆனால், எதிர்க்கட்சிகளின் முக்கியத் தலைவர்கள் இளம் தலைமுறையினரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.
    iv. நிகழாண்டு உலக அளவில் ஆளும் அரசுக்கு எதிராக 'ஜென் இசட்' தலைமுறையினர் போராட்டம் நடத்துவது அதிகரித்து வருகிறது. கடந்த செப்டம்பர் மாதம் நேபாள அரசுக்கு எதிராக இளம் தலைமு றையினர் நடத்திய போராட்டத்தால் பிரதமர் கே.பி.சர்மா ஒலி பதவி விலகினார். கடந்த ஆண்டு வங்கதேசத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தால் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார்.
3. தென் சீனக் கடலில் முதல்முறையாக சீன ராணுவத்தின் போர் விமானங்கள் குண்டுவீச்சு பாணியில் ரோந்து சென்றன.
    i. அந்தக் கடற்பகுதியில் பிலிப்பின்ஸின் கூட்டு கடற்படைப் பயிற்சிக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கும் வகையில், இந்த ரோந்து மேற்கொள்ளப்பட்டது.
    ii. பிராந்திய மற்றும் சர்வதேச வர்த்த கத்துக்கு தென் சீனக் கடல் முக்கியப் பகுதியாக விளங்குகிறது. அந்தக் கடலின் பெரும்பாலான பகுதிக்கு சீனா உரிமை கோரிவரும் நிலையில், அந்தக் கடற்பகுதியில் தமக்கும் உரிமை இருப்பதாக பிலிப்பின்ஸ், வியத்நாம், புரூணே, தைவான் ஆகிய நாடுகளும் தெரிவித்து வருகின்றன.
    iii. இந்நிலையில், அந்தக் கடற்பகுதியில் அமெரிக்கா, ஜப்பான் கடற்படைகளுடன் இணைந்து பிலிப்பின்ஸ் கடற்படை கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டது. அந்தக் கடற்பகுதியை மேற்கு பிலிப்பின்ஸ் கடற்பகுதி என்று பிலிப்பின்ஸ் அழைக்கிறது.
    iv. இந்தப் பயிற்சிக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கும் வகையில், தென் சீனக் கடலில் முதல்முறையாக சீன ராணுவத்தின் போர் விமானங்கள் குண்டுவீச்சு பாணியில் ரோந்து சென்றன.
    v. தென் சீனக் கடலில் தாங்கள் உரிமை கோரும் பகுதிகளில் தங்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதில் சீன, பிலிப்பின்ஸ் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படைகள் இடையே அண்மைக் காலமாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனால் அந்தக் கடற்பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.
    vi. தைவான் விவகாரம் - இறையாண்மை கொண்ட தனி நாடாக தைவான் தன்னைக் கருதுகிறது. ஆனால், தைவானை தமக்குச் சொந்தமான பகுதி என்று

சீனா தெரிவித்து வருகிறது. இந்நிலையில், தைவான் மீது படையெடுத்து சீனா தாக்குதல் நடத்தினால், அது ஜப்பானுக்கு அச்சுறுத்தலான சூழலாகக் கருதப்படும் என்றும், இது ராணுவ வழியில் ஜப்பான் பதிலடி அளிக்க வழிவகுக்கும் என்றும் அந்நாட்டுப் பிரதமர் சனே தகாய்ச்சி அண்மையில் அறிவித்தார். இதைத் தொடர்ந்து, தைவான் விவகாரத்தில் ஜப்பான் தலையிடக் கூடாது என்று சீனா எச்சரிக்கை விடுத்தது. இந் நிலையில், தென் சீனக் கடலில் சீனாவின் போர் விமானங்கள் குண்டுவீச்சு பாணியில் ரோந்து சென்றதில், சீனா-ஜப்பான் இடையே திடீரென ஏற்பட்ட பதற்றமான சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

4. எண்ம (டிஜிட்டல்) தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்ட விதிமுறைகள் 2025- ஐ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

i. தங்கள் தரவுகளை குடிமக்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், அந்தத் தரவுகள் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யவும் அந்த விதிமுறைகள் வழிவகை செய்கின்றன. அத்துடன் இணையத்தில் அவர்களின் தன்மறைப்பு நிலையை (பிரைவஸி) காக்க வேண்டும் என்பதும் அந்த விதிமுறைகளின் நோக்கமாக உள்ளது.

ii. தனிநபர் தரவுகள் தொடர்பாக நிறுவனங்கள் கடுமையாகப் பின்பற்ற வேண்டிய கால அட்டவ ணையையும் இந்த விதிமுறைகள் தெளிவாக வரையறுத்துள்ளன. இந்த விதிமுறைகள் 12 முதல் 18 மாத காலத்தில் படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, 18 மாதங்க ளுக்குப்பிறகு முழுமையாக அமலுக்கு வரும். இது தொடர்பாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

iii. 2023-ஆம் ஆண்டின் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம் முழுமையாக அமலுக்கு வரும் விதமாக, அந்தச் சட்ட விதிமுறைகள் அறிவிக்கப்படுகின்றன.

iv. இந்த விதிமுறைகளின்படி, ஒருவரின் தனிப்பட்ட தரவுகள் எதற்காக திரட்டப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து வெளிப்படையாக விளக்கி, அதற்கு சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து எளிமையான முறையில் ஒப்புதல் பெறுவதற்கான நோட்டீஸை தரவு நிர்வாக பொறுப்பாளர்கள் (ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடக தளங்கள், கூகுள், விளையாட்டு செயலி நிறுவனங்கள் போன்றவை) வெளியிட வேண்டும். தனிநபர் ஒருவரின் தரவு கசிந்தால், அதுகுறித்து அந்த நபருக்கு தரவு நிர்வாக பொறுப்பாளர்கள் முறைப்படி எளிமையான மொழியில் தெரியப்படுத்த வேண்டும். அந்தத் தரவு கசிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், உதவிக்கு தொடர்பு கொள்ள

v. வேண்டியவரின் விவரங்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தத் தரவுகளைக் கையாள்வது தொடர்பான சந்தேகங்கள் குறித்து தனிநபர்கள் கேள்வி எழுப்புவதில் உதவ, தரவு பாதுகாப்பு அதிகாரி அல்லது பிரத்யேக அதிகாரியை தொடர்பு கொள்வதற்கான விவரத்தை தரவு நிர்வாக பொறுப்பாளர்கள் தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.

vi. 90 நாள்களில் பதில்: தங்களைப் பற்றிய தரவுகளை தனிநபர்கள் அணுகுதல், பிழைகளைத் திருத்துதல், புதுப்பித்தல் அல்லது அழிக்கும் உரிமை, அந்த உரிமையைத் தங்கள் சார்பாக பயன்படுத்த மற்றொருவரை தனிநபர்கள் நியமித்தல் போன்ற கோரிக்கைகளுக்கு அதிகபட்சமாக 90 நாள்களுக்குள் தரவு நிர்வாக பொறுப்பாளர்கள் பதிலளிக்க வேண்டும்.

vii. தரவு பாதுகாப்பு வாரியம் - இணையவழியில் பிரத்யேக தளம், கைப்பேசி செயலி மூலம் தங்கள் தரவுகள் தொடர்பான புகார்களை பொதுமக்கள்

அளிக்கவும், அந்தப் புகார்கள் மீதான நடவடிக்கை எந்தக்கட்டத்தில் உள்ளது என்பதை பின்தொடர உதவும் வகையிலும், முழுமையான எண்ம நிறுவனமாக தரவு பாதுகாப்பு வாரியம் செயல்படும். இந்தப் புகார்கள் தொடர்பான முடிவுகளுக்கு எதிராக தொலைத்தொடர்பு சச்சரவுக்கான தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் (டிடிஎஸ்ஏடி) மேல்முறையீடு செய்யலாம் என்று தெரிவிக்கப் பட்டது.

viii. இந்த விதிமுறைகள் மூலம், தங்கள் தரவுகளைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலை எந்த நேரத்திலும் ரத்து செய்யும் அதிகாரம் தனி நபர்களுக்குக் கிடைக்கும்.

ix. விளம்பரம் அல்லது மோசடி செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் அழைப்புகளை பொதுமக்கள் தவிர்க்கவும், எந்தவொரு எண்ம வழியிலும் அவர்களின் தனிநபர் தரவு, காணொலி மற்றும் குரல் பதிவை அனுமதியின்றி பெறுவதை தடுக்கவும் இந்த விதிமுறைகள் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

x. தனிநபர் தரவு கசிவின் தன்மையைப் பொறுத்து அதற்கு தரவு பாதுகாப்பு வாரியம் அபராதம் - வசூலிக்கவும் இந்த விதிமுறைகள் வழிகோலுகின்றன.

xi. சட்ட நடவடிக்கை - தனிநபரின் அனுமதியில்லாமல் அவரின் கைப்பேசி எண் கசிந்து தேவையற்ற அழைப்புகள் வந்தால், அந்த எண்ணை எந்த நிறுவனம் கசிய விட்டது என்பது குறித்து விசாரணை நடத்தி, அதுகுறித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள இந்த விதிமுறைகள் உதவும்.

xii. நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்துதல், ஏதேனும் குற்றம் நிகழ்ந்தால் அதற்கு எதிரான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற சூழல்களில் பொதுமக்களுக்கு உள்ள உரிமையை இந்த விதிமுறைகள் கட்டுப்படுத்துகின்றன.

xiii. பயனராக உள்ள தனிநபர்கள் தங்கள் கணக்கை 3 ஆண்டுகளாகப் பயன்படுத்தாமல் இருந்தால், அவர்களின் தனிப்பட்ட தரவை இணையவழி வர்த்தக நிறுவனங்கள், இணையவழி விளையாட்டு நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடகதளங்கள் அழிக்க வேண்டும் என்று விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. சமூக உள்ளடக்கத்தையும், பொருளாதார வளர்ச் சியையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக இந்தியா திகழ்கிறது என ஐ.நா. மேம்பாட்டுத்திட்ட மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

i. எண்மத் தொழில்நுட்பம்,சுற்றுச் சூழல் செயல்பாடுகள் உள்ளிட்ட துறைகளில் புதிய ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள மூன்று நாள் சுற்றுப்பயணமாக ஐ.நா. மேம்பாட்டுத் திட்டச் செயல் அதிகாரி ஹாலி யாங் ஜூ இந்தியா வந்துள்ளார்.

ii. பருவநிலை நிதி: 2030-க்குள் பருவநிலை மாற்றத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைச் சீர்செய்ய வளரும் நாடுகளுக்கு ஆண்டுக்கு ரூ.212 லட்சம் கோடி நிதி தேவைப்படுகிறது.

iii. இதை அடிப்படையாகக் கொண்டே அஜர்பைஜானின் பாக்குவில் நடைபெற்ற 29-ஆவது பருவநிலை மாநாட்டில் ஆண்டுக்கு ரூ.115 லட்சம் கோடி நிதி திரட்ட அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வலியுறுத்தப்பட்டது. இந்த இலக்கை அடைய வளரும் நாடுகளுக்கு உடனடியாக ஆதரவளிப்பது அவசியம்' என்றார்.

6. பட்டியலின பிரிவினரில் (எஸ்சி) கிரீமி லேயர் (சமூக பொருளாதார நிலையில் முன்னேறியவர்கள்) கண்டறியப் பட்டு அவர்களுக்கு இடஒதுக்கீடு சலுகைகளை ரத்து செய்ய வேண்டும் என்பதே என் நிலைப்பாடு என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

பி.ஆர்.கவாய் தெரிவித்தார்.

7. குழந்தைகளின் உரிமைகளுக்கான ஐ.நா.வின் அமைப்பான 'யுனிசெஃப்' இந்தியா பிரிவின் தூதராக நடிகை கீர்த்தி சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.
   i. அவர் இந்தப் புதிய பொறுப்பில், மன ஆரோக்கியம், கல்வி மற்றும் பாலின சமத்துவம் போன்ற முக்கியமான விஷயங்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவார். அவர் ஏற்கெனவே, தன் திரைப்படத் தேர்வுகள் மூலமும் இதுபோன்ற நல்ல கருத்துகளைப் பரப்பி வருகிறார்' என்று குறிப்பிட்டுள்ளது.
   ii. யுனிசெஃப் இந்தியாவுக்கான பிரதிநிதி - சிந்தியா மெக்காஃப்ரி.
8. சிந்தட்டிக்' போதைப் பொருள்களைக் கண்டறிய போலீஸாருக்கு 'கிட்' வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் போதைப் பொருள் தடுப்பில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.
   i. தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது அதிகரித்து வருகிறது. இதைத் தடுப்பதற்கு காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கிறது. தொடர்ச்சியாக போதைப் பொருள் வழக்குகளில் சிக்குபவர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவர்களது சொத்துகளும், வங்கிக் கணக்குகளும் காவல் துறையினரால் முடக்கப்படுகின்றன.
   ii. தமிழக காவல் துறையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் போதைப் பொருள் கண்டறியும் 'கிட்'கள் மூலம் போதைப் பொருள் தொடர்பாக 1,100 வகை ஆய்வுகளைச் செய்ய முடியும்.
   iii. மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த கிட், மகாராஷ்டிர மாநிலம் புணேயில் உள்ள ஹிந்துஸ்தான் மருந்து நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதாகும். சில ஆண்டுகளுக்கு முன்பே இந்த கிட் உருவாக்கப்பட்டாலும், முதலில் இது மத்திய புலனாய்வு அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது.
   iv. முக்கியமாக, மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, சுங்கத் துறை, வருவாய் புலனாய்வுப் பிரிவு, ரயில்வே பாதுகாப்புப் படையினர், சிபிஐ ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் மாநில காவல் துறைகளில் உள்ள போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. தற்போது மாநில காவல் துறையில் உள்ள பிற பிரிவுகளுக்கு வழங்கப்படுகிறது.
   v. ஹிந்துஸ்தான் மருந்து நிறுவனம், இந்த 'கிட்'டை தயாரித்தாலும், மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவின் மூலமாகத்தான் நாடு முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது.
   vi. 'கிட்'டில் உள்ள வேதிப் பொருள்கள் காலியானாலும், மத்திய - போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு மூலமாக மீண்டும் வேதிப் பொருள்களை ஹிந்துஸ்தான் மருந்து நிறுவனம் வழங்குகிறது.
   vii. சிந்தட்டிக் போதைப் பொருள் - இளைய தலை முறையினரும், இளைஞர்களும் போதைப் பொருள் விற்பனையிலும், கடத்தலிலும் ஈடுபடுவது அதிகரிப்பது காவல் துறையினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள், 'சிந்தட்டிக்' போதைப் பொருள் என்ற வேதி போதைப் பொருள், போதை மாத்திரை போன்றவற்றை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் போது உடலில் ஏற்படும் மாற்றங்களால் அதை அருகே இருக்கும் நபர்கள் எளிதாக கண்டறிய முடியும். ஆனால், இந்த வகை போதைப் பொருளைப் பயன்படுத்தினால் பிற நபர்களால்

எளிதில் கண்டறிய முடியாது என்பதாலும், பிற போதைப் பொருள்களைவிட போதையின் தாக்கம் அதிக நேரம் இருப்பதாலும் இளைஞர்கள், இந்த வகை போதைப் பொருள் முதலில் இந்த போதைப் பொருளின் நுகர்வோராக இருக்கும் இளைஞர்கள், பின்னர், தங்களது பணத் தேவைக்காக விற்பனையாளராகவும், கடத்துபவராகவும் மாறுகின்றனர். இவர்களை போதைப் பொருள் கடத்தும் கும்பல் சாதுர்யமாக மூளைச் சலவை செய்து தங்களுடன் சேர்த்துக் கொள்கிறது.

viii. போதைப் பொருளைக் கண்டறியும் 'கிட்' - சிந்தட்டிக் வகை போதைப் பொருள் சிக்கினால் கூட அதை உறுதி செய்வதற்கு காவல் துறையினருக்கு இரண்டு நாள்களாகிறது. கைப்பற்றப்பட்டது போதைப் பொருள்தான் என்பதை தடயவியல் துறை ஆய்வகத்தில் உறுதி செய்த பின்னரே, வழக்கின் அடுத்தகட்ட நடவடிக்கையை காவல் துறையினர் எடுக்க முடிகிறது. இரு நாள்கள் காலதாமதத்தால் வழக்கின் விசாரணையில் பெரும் தொய்வும், குற்றவாளிகள் வழக்கில் இருந்து தப்பிச் செல்லும் வாய்ப்பும் ஏற்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு தமிழக காவல் துறையினருக்கு தற்போது போதைப் பொருளைக் கண்டறியும் கிட் (டிரக் டிடெக்சன் கிட்) வழங்கப்படுகிறது.

ix. இந்த கிட் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் சிந்தட்டிக் போதைப்பொருள்களைக் கண்டறியும் வேதிப் பொருள்கள் 16 குப்பிகள் இருக்கின்றன. பறிமுதல் செய்யப்படும் போதைப் பொருள் இந்தக் குப்பிகளில் இருக்கும் வேதிப் பொருள்களில் ஒவ்வொன்றாக சிறிதளவு சோதனைக்காக கலக்கப்படுகிறது. அந்த வேதிப் பொருள் என்ன மாதிரியான நிறத்தை வெளிப்படுத்துகிறதோ, அதன் அடிப்படையில் அது எந்த வகை போதைப் பொருள் என்று கண்டறியப்படுகிறது. இதேபோன்று இரண்டாவது பகுதியிலும் 16 குப்பிகள் இருக்கின்றன. இது, பறிமுதல் செய்யப்படும் சிந்தட்டிக் போதைப் பொருளில், எந்த வகை மூலப்பொருள்கள் கலக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் வேதிப் பொருள்கள் இருக்கின்றன.

x. இதனால் இந்த வழக்குகளில் விரைந்து துப்பு துலக்கப்பட்டு, குற்றவாளிகள் தப்பிச் செல்லாத வகையில் காவல் துறை செயல்படும் சூழல் உருவாகியுள்ளது.

xi. காத்திருக்கும் சவால்: பெரும் பாலான சிந்தட்டிக் போதைப் பொருள்கள் தூய உப்பு போன்று வெண்மை நிறத்திலோ, இளம் மஞ்சள் நிறத்திலோ இருப்பதால், போதைப் பொருள் கும்பலிடம் பறிமுதல் செய்யும்போது, அது போதைப் பொருள்தான் என்பதைக்கூட உடனடியாக உறுதி செய்ய முடியாது. ஆனால், இந்த 'கிட்' வழங்கப்பட்ட பின்னர் நிலைமை முற்றிலும் மாறியுள்ளது.

xii. சில மாதங்களுக்கு முன்பு இந்த கிட் தமிழக காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது. முதலில் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு உள்ளிட்ட சிறப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்டது. தற்போது அனைத்து மாநகர காவல் துறையினருக்கும், மாவட்ட காவல் துறையினருக்கும் வழங்கப்படுகிறது.

xiii. தமிழகத்தில் மெத்தம்பெட்ட மைன், மெத்தகுலோன், கெட்டமைன், ஹெராயின், எல்எஸ்டி ஸ்டாம்ப், ஆம்பெட்டமைன், சூடோபெட்ரின் போன்ற சிந்தட்டிக் வகை போதைப் பொருள்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

xiv. இந்த 'கிட்'களால் தமிழக காவல் துறையினருக்கு இதுவரை இருந்த மிகப்பெரிய சவாலான பணி எளிதாக மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும் சிந்தட்டிக் போதைப் பொருள் கடத்தல் கும்பல் 'நெட்வொர்க்குகளை' உடைக்க

வேண்டிய சவாலான பணி நீடிக்கவே செய்கிறது.

9. கேரளத்தில் அமீபா நுண்ணுயிரியால் ஏற்படும் மூளை அழற்சி பாதிப்பு வேகமாக பரவிவரும் நிலையில், தமிழகத்தில் உள்ள நீர் நிலைகளில் குளிப்பதற்கு தடை விதிக்குமாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.
   i. அசுத்தமான தண்ணீரில் உள்ள அமீபா மூலம் உருவாகும் 'என்சபலிட்டிஸ்' எனப்படும் மூளை அழற்சி பாதிப்பு கேரளத்தில் அதிகரித்து வருகிறது. இதுவரை பலர் அதற்கு உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகின.
   ii. சுகாதாரமற்ற தண்ணீரில் குளிக்கும்போது சுவாசப்பாதை வழியே ஊடுருவிச் செல்லும் அந்த வகை அமீபா, நேரடியாக மூளையில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது. காய்ச்சல், வாந்தி, மயக்கம், தலைவலி, மனக் குழப்பம், பிதற்றல், வலிப்பு போன்ற அறிகுறிகள் இதனால் ஏற்படும். தீவிர சிகிச்சையளிக்காவிடில் உயிரிழப்பு ஏற்படக்கூடும்.
   iii. அண்டை மாநிலத்தில் நிலவிவரும் இத்தகைய அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.
   iv. தனியார் மற்றும் அரசு நீச்சல் குளங்கள் அனைத்தும் அரசு வழிகாட்டுதலின்படி தூய்மையாக பராமரிக்க வேண்டும். தண்ணீரில் குறிப்பிட்ட அளவு குளோரின் கலந்திருத்தல் முக்கியம். நீர் நிலைகள் தூய்மையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதேபோன்று அதில் இறங்குவதற்கும், குளிப்பதற்கும் தடை விதிக்க வேண்டும்.

10. கத்தார் அரசர் தமீம் பின் ஹமாத் அல்- தானியை தோஹாவில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.
   i. கனடா பயணத்தைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜெய்சங்கர் கத்தார் வந்தடைந்தார். தலைநகர் தோஹாவில் அவருக்கு மன்னர் தமீம்பின் ஹமாத் அல்-தானி சிறப்பு வரவேற்பு அளித்தார். பின்னர் அவர்கள் இருவரும் இந்தியா-கத்தார் உறவு குறித்து முக்கிய ஆலோசனை மேற்கொண்டனர்.
   ii. முன்னதாக பஹ்ரான் வெளியுறவு அமைச்சர் அப்துல் லத்தீஃப் பின் ரஷீத் அல் சயானியுடன் அவர் தொலைபேசி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். அப்போது பல்வேறு துறைகளில் இந்தியா-பஹ்ரைன் இடையே இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்தும் பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதம் மேற்கொண்டதாக அவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டார்.
   iii. இம்மாத தொடக்கத்தில் அப்துல் லத்தீஃப்பின் ரஷீத் அல் சயானி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது இருவரும் ஆலோசனை நடத்தினர். அதன் முடிவில் இரட்டை வரிவி திப்பு தடுப்பு ஒப்பந்தம் (டிடிஏஏ) மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை விரைவுபடுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.
   iv. இந்தியா-பஹ்ரைன் இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2024-25-இல் ரூ.14,500 கோடியை எட்டியது. 15 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட பஹ்ரைனில் 3.3 லட்சம் இந்தியர்கள் உள்ளனர். பஹ்ரைனின் 5 முக்கிய வர்த்தக நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.
   v. அதேபோல் இந்தியா-கத்தார் இடையே 2023-24-இல் ரூ.1.2 லட்சம் கோடி மதிப்பிலான வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.